21, பிப்ரவரி 2018

புதுடில்லி

1. **மாண்புமிகுதிருமதி.சுஷ்மா ஸ்வராஜ்**

இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர்,

வெளியுறவுத்துறை அமைச்சகம், தெற்கு ப்ளாக்,

ரெய்ஸினா ஹில், புதுடில்லி – 110 011.

2. **மேதகு ஸர் டாம்னிக் ஆஸ்க்வித்**

**வடக்கு அயர்லாந்து, பெரிய பிரிட்டன் உள்ளிட்ட**

**ஐக்கிய ராஜ்ஜியங்களின் உயர் ஆணையாளர்,**

சாந்தி பாதை, சாணக்யபுரி, புதுடில்லி – 110 021.

**மனு :** சொந்த தேசத்திற்கு மஹ்ரூஸ்யையும் மெஹ்ஃபுஸாவையும் திரும்ப அழைத்து வருதல்.

ஐக்கிய ராஜ்ஜியத்தில் உள்ள பர்மிங்ஹாம் என்ற நகரத்தில் உள்ளூர் அமைப்புகளினால், தமிழ்நாடு, நாகப்பட்டினத்தைச் சேர்ந்த, மஹ்ரூஸ் (8 வயது பையன்) ஐயும் மெஹ்ஃபுஸா (6 வயது சிறுமி) ஐயும் அவர்களுடைய சொந்த தாய் தகப்பனாரிடமிருந்து பிரித்து கட்டாயப்படுத்தி தத்து எடுக்கும் சோகமான வழக்கில், கீழே கையெழுத்திட்டவர்கள் உங்கள் உடனடி தலையீட்டை வேண்டுகிறோம்.

மஹ்ரூஸ் மற்றும் மெஹ்ஃபுஸா வின் பெற்றோர்கள் மீது அவர்களை தவறாக துன்புறுத்தினார்கள் என்றோ, கவனிக்காமல் விட்டார்கள் என்றோ எந்த வித குற்றச்சாட்டும் இல்லை.

10 வருடம் வேலை பார்த்த பின் வேலையை இழந்த அவர்களின் தந்தை உள்ளூர் அமைப்புக்கு இலவச உணவுக்காகவும், உதவித் தொகைக்காகவும் விண்ணப்பித்த போது எழுந்த பிரச்சினை தான் இந்த குழந்தைகளை தாய் தந்தையிடமிருந்து பிரிப்பதற்கு ஒரே காரணம்.

பெற்றோர்கள் குழந்தைகள் மீது அன்புடன் இருக்கிறார்கள். ஆனால், தாய் தந்தையின் உள்ளூர் அமைப்புடனான பிரச்சினை, மற்றும் அவர்களின் நிச்சயமற்ற குடியேறும் நிலை ஆகியவை துன்பமான உணர்ச்சிகளை குழந்தைகளுக்கு தருவதால், இக்குழந்தைகளை தாய் தந்தையிடமிருந்து பிரிக்க வேண்டும் என பர்மிங்ஹாம் குடும்ப நீதிமன்றம் கொடுமையான ஒரு உத்திரவை பிறப்பித்துள்ளது.

குழந்தைகளை 2015 – நடுவில் பிரிக்கும் போது ஐக்கிய ராஜ்ஜியம் நாட்டில் தனது மூன்றாவது குழந்தை பிறந்தால், அதை அதிகாரிகள் எடுத்துக் கொண்டு விடுவார்கள் என தாய்க்கு அறிவுரை கூறப்பட்டதால் அவர் சிங்கப்பூருக்கு சென்று விட்டார். தந்தை அங்கேயே தங்கி குழந்தைகளை மீட்க முயற்சித்தார். ஆனால் குழந்தைகளை அவர்களுடைய தாய் – தந்தையரிடமே அல்லது குடும்பத்தினரிடையே தொலை பேசியில் பேசக்கூட, ஐக்கிய ராஜ்ய அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. நீதி மன்றத்தில் குழந்தைகளை ஆஜர் படுத்தவும் இல்லை. தற்பொழுது பெற்றோர்களுக்கு குழந்தைகள் எப்படியிருக்கிறார்கள் உயிருடன் இருக்கிறார்களா என்பதே தெரியவில்லை.

குழந்தைகளை இந்தியாவில் இருக்கும் அவர்களது உறவினர்களிடம் அனுப்பி வையுங்கள் என்பதுதான் பெற்றோர்களின் ஒரே வேண்டுகோள். அவர்கள் குடும்பத்தை விட்டு இந்த முறையில் பிரித்து வைக்க எந்த முகாந்திரமும் இல்லை. அவர்கள் எந்த குற்றத்தையும் புரியவில்லை. நாகப்பட்டினத்தில் உள்ள குழந்தைகளின் உறவினர்கள் குழந்தைகளை பாதுகாப்பாக பார்த்துக் கொள்ளும் வசதியுடன் இருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே குழந்தைகள் சார்பாக தலையிட்டு மெஹ்ரூஸ் மற்றும் மெஹ்ஃபுஸாவை திருப்பி அனுப்பி வைக்குமாறு மாண்புமிகு. வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முறையீடு செய்திருக்கிறார்கள்.

மெஹ்ரூஸ் மற்றும் மெஹ்ஃபுஸா வை அன்புடன் அரவணைக்க தயாராக இருக்கும் இந்தியாவில் உள்ள உறவினர்களிடம் திருப்பி அனுப்புமாறு இந்திய அரசையும், ஐக்கிய ராஜ்ஜியம் அரசையும் வேண்டுகிறோம்.

## <u>திருப்பி அனுப்ப வழிமுறைகள், முன்மாதிரிகள், சட்டங்கள்</u>

இதுமாதிரி பெற்றோர் காப்பிலிருந்து பிரிக்கப்பட்ட வெளிநாட்டு குழந்தைகளை அவர்களது சொந்த நாட்டிலுள்ள உறவினர்களிடம் அனுப்ப நன்கு வகுக்கப்பட்ட வழிமுறை உள்ளது.

இந்தியாவும், ஐக்கிய ராஜ்யமும் கையெழுத்திட்டுள்ள **குழந்தைகளின் உரிமைகளுக்கான பல்நாட்டு மாநாடு, மனித உரிமைகளுக்கான உலகலாவிய அறிவிப்பு, குழந்தைகளின் சமூக மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பல்நாட்டு உடன்படிக்கை, பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளுக்கான பல்நாட்டு உடன்படிக்கை** படி குழந்தைகளுக்கு அவர்களுடைய குடும்பத்துடன், மதத்துடன் , கலாச்சாரத்துடன் இருக்க உரிமை உண்டு.

குழந்தைகள் கட்டாயப்படுத்தி தத்து எடுத்த வழக்குகள் உட்பட, பல வழக்குகளில் ஐக்கிய ராஜ்ஜியம் குழந்தைகளை அவர்களுடைய சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பியிருக்கிறது. உதாரணமாக ஸ்லோவக் பகுதியிலிருந்து வந்த இரண்டு குழந்தைகளை ஐக்கிய ராஜ்ஜியம் நீதிமன்றம் கட்டாய தத்து எடுக்க 2010-ல் உத்திரவிட்டும் கூட, 2013ல் அக்குழந்தைகளை அவர்களது ஸ்லோவிக்கியாவில் உள்ள அவர்களது பாட்டியிடம் திரும்ப அனுப்பியிருக்கிறது.

கடந்த காலத்தில் மற்ற நாடுகள், குறிப்பாக நார்வே மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இதுமாதிரி குழந்தைகளை திருப்பி அனுப்ப ஒப்புக் கொண்டிருக்கிறது.

இந்த துரதிருஷ்ட குழந்தைகளை அவர்கள் வீட்டிற்கு திருப்பி அனுப்புமாறு ஐக்கிய ராஜ்ஜிய அரசையும், இந்திய அரசையும் நாங்கள் உண்மையாகவும், பணிவாகவும் வேண்டுகிறோம்.

வழக்குகளின் விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

கையொப்பம்

பெயர்: பதவி: தொடர்பு (விருப்பமிருந்தால்)

மனு ஒருங்கிணைப்பாளர்

சுரண்யா அய்யர், புதுடில்லி

வழக்கறிஞர், இணையதளம்:

www.saveyourchildren.in

இமெயில்: suranya_aiyar@yahoo.com

மொபைல்: 9818886808